பக்கங்கள் 12+2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 16 திங்கட்கிழமை 02.11.2024 | அதிர்வு 123

## மாகாண சபை முறைமைக்கு முடிவு கட்டப்படும்

**ரில்வின் சில்வா திட்டவட்டம்**

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசமைப்பின் 02



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மாகாண சபை வேறு! சம உரிமை வேறு!!

## ரில்வின் சில்வாவுக்கு மனோ கணேசன் பதிலடி

“மாகாணசபை என்பது வேறு. சம உரிமை என்பது வேறு என்பதை ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிந்துகொள்ள வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“மாகாண சபை என்பதை நாம் ஏற்கமாட்டோம். ஆனால், இன்றைய மாகாண சபை முறைமை என்பது தமிழ் மக்களின் போராட்டங்களால் கிடைக்கப்பெற்றது. ஆகவே, அதை நாம் எதிர்க்கவும் போவதில்லை” என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடந்த தேர்தல்களுக்கு முன் என்னிடம் நேரடியாகக் கூறியுள்ளார். இன்னமும் பல தமிழ்த் தலைவர்களிடமும் அவர் இந்தக் கருத்தைக் கூறி இருப்பதை நான் அறிவேன். 02

## மாவீரர் நாள் பதிவுகள்: ரி.ஐ.டியால் 4 பேர் கைது

### கெலும் ஜயசுமணவுக்கு டிசம்பர் 4 வரை மறியல்



பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான தகவல்களை இணையத்தில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அரசியல்வாதியும் பிரபல 02

## வடமராட்சியில் பறந்த புலிக் கொடி: தீவிர விசாரணையில் பொலிஸார்

யாழ். வடமராட்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சின்னத்துடனான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை மற்றும் விடுதலைப்புலிகளின் கொடியைப் பறக்க விடப்பட்டமை தொடர்பான விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

உடுப்பிட்டியில் கடந்த 26ஆம் திகதி விடுதலைப்புலிகளின் சின்னத்துடனான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மறுநாள் 27ஆம் திகதி உடுப்பிட்டியில் புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

இவை தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் 



பெற்றதையடுத்து , பொலிஸார் அவ்விடத்துக்குச் சென்று அவற்றை அகற்றியதுடன், அவற்றை சான்றுப்பொருளாக பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் இந்தத் சம்பவம் 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வடமராட்சியில்...**

தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**மாகாண சபை வேறு...**

இப்போது “மாகாண சபையை அகற்றி விட்டு அதற்குப் பதில் நாடு தழுவிய, சம உரிமையைத் தருவோம்” என தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறுகின்றார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சம உரிமை என்பது வேறு. அதிகாரப் பகிர்வு என்பது வேறு.

மாகாண சபையை அகற்றுவது பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை வடக்கு மாகாண மாவட்டங்களில் தமிழ் மக்களின் வாக்குகள் பெரும்பான்மையாகக் கிடைத்துள்ளமையால், “மாகாண சபை என்பதை நாம் ஏற்க மாட்டோம்” என்ற பழைய ஜே.வி.பியின் கொள்கை நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு அதை அகற்ற ஆணை தந்துள்ளார்கள் எனத் தேசிய மக்கள் சக்தி நினைக்கின்றதோ எனத் தெரியவில்லை.

சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகள் இந்த நாட்டில் உறுதிப்படுத்த இன்னமும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். இங்கே இன்று அரசமைப்பிலேயே, இந்த நாட்டின் மொழிகள். மதங்கள் மத்தியில் சம உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை. அரச மதமான பௌத்த மதத்துடன் பௌத்த தேரர்கள், இந்த நாட்டின் அதிகார மையத்தில் இருக்கின்றார்கள்.

மொழி தொடர்பில் சில பலவீனமான சட்டங்கள் ஆங்காங்கே இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த இந்த நாட்டின் அரச அதிகார வர்க்கம் இடம் கொடுப்பதில்லை. மொழிகள் மத்தியில் சம உரிமையை அமுல் செய்யப் படாத பாடு பட்ட எனக்கு இது நன்கு தெரியும்.

சம உரிமை என்பது வானத்தில் பறக்கும் அழகான பறவை. மாகாண சபை என்பது கையில் இருக்கும் பறவை. வானத்தில் பறக்கும் அழகான பறவையை பற்றி கனவு கண்டு கொண்டு கையில் இருக்கும் பறவையை விட்டு விடச் சொல்கின்றனவா ஜே.வி.பியும், தேசிய மக்கள் சக்தியும் எனக் கேட்க விரும்புகின்றேன்.

சிங்கப்பூர் சிறிய நிலப்பரப்பு கொண்ட ஒரு நாடு. ஆகவே, அங்கே மாகாணங்களை அமைத்து அதிகாரப் பகிர்வு செய்ய முடியாது. ஆனாலும், அங்கேயும், ஜனாதிபதிப் பதவி என வரும்போது, சீனர், தமிழர், மலாய் என மூன்று இனத்தவர்களும் மாறி மாறி பதவி வகிக்கும் முறையில் அரசியல் சட்டம் இருக்கின்றது. அவர்களது அமைச்சரவையில் அனைத்து சிங்கப்பூர் இனத்தவரும் இடம்பெறுகின்றார்கள்.

நல்லாட்சியின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி நடந்தது. அதற்கான வழிகாட்டல் குழுவில் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அங்கத்துவம் பெற்று பணியாற்றினார். நானும் வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றேன். இன்னமும் பல இன, மத, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் வகித்தார்கள்.

ஆகவே, அத்தகைய புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது, இவை பற்றி சிநேகபூர்வகமாகக் கலந்து பேசி, வாத, விவாதம் செய்து, தீர்மானங்களுக்கு வரலாம். ஆனால், இப்போதே அவசரப்பட்டு, “மாகாண சபையை அகற்றியே தீருவோம். அது ஜே.வி.பியின் கொள்கை. அது மாறவில்லை. ஜே.வி.பியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றுதான்” என ஒருதலைப்பட்சமாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் நண்பர் ரில்வின் சில்வா கூறுவது ஏற்புடையதல்ல.” – என்றுள்ளது.

**மாகாண சபை...**

13ஆவது திருத்தச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்குக் கொண்டு வரவும், புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

“சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்னைகளை தோற்றுவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகின்றது. எனவே, சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றுவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத் திட்டத்தை எமது அரசு முன்வைக்கும்.” – என்றும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாகக் கூறிய இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகின்றது.

எனவே, பயனற்ற மாகாண சபை முறைமைக்குப் பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக்கூடியதும், அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையைப் பெற்றுக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசு செயற்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைமை வாய்ந்த அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு உருவாக்குவது முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது.” – என்றார்.

**மாவீரர் நாள் பதிவுகள்...**

தொழில்முனைவோரும் சமூக ஊடக ஆர்வலருமான கெலும் ஜயசுமணவை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பாக, உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை மேற்கொண்டு பொதுமக்கள் மத்தியில் அமைதியற்ற சூழலை ஏற்படுத்த முற்பட்ட குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட கெலும் ஜயசுமண, கொழும்பு கோட்டை கணினி குற்றப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அநுர அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், மாவீரர் நாள் பதிவுகள் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுன்னாகம், மருதானை மற்றும் பத்தேகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கெலும் ஜயசுமண நாலாவதாகக் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐஸ் போதையுடன் இளைஞன் கைது!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை (30) இரவு அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் இந்த இளைஞனைக் கைது செய்திருந்தனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

குருநாகல் பொல்காவலை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 5 கிராம் 340 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# ஓமந்தை கொலைச் சம்பவம்: சந்தேகநபர் ஒருவர் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டம், ஓமந்தை, சேமமடு – இளமருதங்குளம் பகுதியில் நேற்று மாலை வாளால் வெட்டி ஒருவரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம் பகுதியில் பழைய பகை ஒன்றின் காரணமாக ஐந்து பேர் கொண்ட குழு வவுனியாவிலிருந்து இளமருதங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தரை வாளால் வெட்டிக் கொலை செய்திருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தில் கூமாங்குளத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ஏனைய சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# நீர்க் குழாய் திருத்த வேலைகளை பார்வையிட்டார் உதுமாலெப்பை எம்.பி.

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் பாரிய நீர்க்குழாய் சேதமான நயினாகாடு வடசேரிக்குச் சென்ற அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெவ்வை அங்கு இடம்பெற்று வரும் குழாய் திருத்த வேலைகளை பார்வையிட்டார்.

அதன் போது அவர் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர்அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி, இயக்கமும் பராமரிப்பும் பிரிவுக்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் சம்மாந்துறை பிரதேச பொறியியலாளர் வேல்கஜன், காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோரைச் சந்தித்து நிலவரங்களை கேட்டறிந்தார்.

சபையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எக்ஸ்கவேற்றர் இயந்திரமொன்றை அம்பாறை நீர்ப்பாசன பொறியியலாளர் இடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளார்.

விரைவாக குடி தண்ணிர் வழங்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளை தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் அங்கு செல்ல முடிந்தது. உண்மையில் காரைதீவு நிந்தவூர் மாளிகைக்காடு சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களை சேர்ந்த 72,000 மக்கள் தண்ணீர் இன்றி தவிப்பதை அறிந்துதான் அங்கு சென்றேன் என்று நடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.







# காரைதீவில் ஒரு வாரமாகத் தண்ணீர் இல்லை; இன்னும் இரண்டு நாள்கள் செல்லுமாம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பிரதான பாரிய நீர்க் குழாய் உடைத்தெறியப்பட்ட காரணத்தால் கடந்த ஏழு நாள்களாக காரைதீவுக் கிராமத்துக்குக் குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது.

தண்ணீரில் மிதந்த காரைதீவுக்கு தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்காலிகமாக மாவடி பள்ளியில் இணைப்பில் இருந்து குடி தண்ணீர் விநியோகத்தை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சாய்ந்தமருது பொறுப்பதிகாரி கஜனி முருகேசு தலைமையில் அக்கரைப்பற்று பிராந்திய பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி, இயக்கமும் பராமரிப்பும் பிரிவுக்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் மற்றும் காரைதீவு பிரதேச அலுவலகப் பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோர் காரைதீவு லவன் தலைமையிலான இராவணா இளைஞர்களின் உதவியுடன் இரவு பகலாக முயற்சி செய்த போதிலும் போதிய பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒரு வாரமாகக் காரைதீவு பெரும்பாக பகுதிக்கு குடி தண்ணீர் விநியோகம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் பலத்தை அசௌகரியத்துக் குள்ளாகி வருகிறார்கள்.

அவ்வேளையில் சித்தானைக்குட்டி ஆலயம் பிரதேச சபை சில தனியார் மற்றும் இராவணா அமைப்பினர் வவுசர் மூலம் வீதி வீதியாகக் குடி தண்ணீர் வழங்கி வருகின்றனர்.

எனினும் பிரதான நீர் விநியோகம் சீர் செய்யுமட வேலைகள் இன்னும் நிறைவடையவில்லை.

பிரதான குடி தண்ணீர் விநியோகம் கிடைக்க மேலும் இரண்டு அல்லது மூன்று நாள்களாவது செல்லும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிந்தவூர் சாய்ந்தமருதைப் பொறுத்தவரை அருகில் இருந்து குடி தணணீர் பெறப்படுவதால் பாரிய தட்டுப்பாடு இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் காரைதீவுக்கு ஒரு வழியிலும் நீர் விநியோகம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.







குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஐஸ் எனும் பேரசுரன்

நாட்டில் உயிரை மாய்த்துக் கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஐஸ் ரக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் மட்டும் 16 முதல் 65 வயதிற்கு இடைப்பட்ட 10 பேர் இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டு உயிரிழந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது. அவர்களில் 4 பேர் முழுமையாகப் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள்என்பதும் அறியப்பட்டுள்ளது.

ஐஸ் ரக போதைப்பொருள் பயன்பாடானது உடலில் குழப்பம், பதற்றம், விரைவான இதயத்துடிப்பு உள்ளிட்ட உடல் நலப்பாதிப்புகளை ஏற்படுத்துவதாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு உள்ளிட்ட உடல் நலப்பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றமையால் இளைஞர்கள் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

'மெத்தம்பெட்டமைன்' என்பதே 'ஐஸ்' எனும் போதைப்பொருளாக அறியப்படுகிறது. இது நூறு வீதம் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற 'சிந்தெட்டிக்' ரக போதைப் பொருள். படிகங்களாகக் காணப்படுகின்ற கலப்படமற்ற போதைப்பொருள் வகை.

ஐஸ் போதைப்பொருளை ஒரு தடவை உள்ளெடுத்தால், அந்த நபரை அது அடிமையாக்கி விடும். பாவித்து 48 மணித்தியாலங்களுக்கு அதன் செயற்பாடு உடலில் இருக்கும் என மருத்துவத் துறையினர் கூறுகின்றனர்.

இதை அதிகளவு உள்ளெடுத்தால், மரணம் ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது என்றும் கூறபடுகின்றது.

ஐஸ் போதைப்பொருளை உள்ளெடுக்கும் நபர்களிடம், எவ்வித அறிகுறிகளையும் பெரும்பாலும் காண முடியாது என்பதுதான் இந்தப் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் உள்ள முதல் சிக்கலாகும்.

ஐஸ் போதைப் பொருள் ஒரு தூண்டியாகச் செயற்படும். உதாரணமாக இரத்த ஓட்டம், இதயத்துடிப்பு போன்றவை அதனால் அதிகரிக்கும். உள்ளெடுத்தால் தூக்கம் வராது.

இதனைப் பாவிப்பவர்கள் உடல் எடையினை திடீரென இழந்து விடுவர். குறுகிய காலத்துக்குள் மனநோய்க்கு ஆளாகுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. பாவிப்பவர் தனது உயிரை அவரே மாய்த்துக் கொள்ளும் நிலைக்குச் சென்று விடுவார் எனவும் விவரிக்கப்படுகின்றது.

இந்த போதைப்பொருளைப் பாவிப்பவருக்கு பாலியல் தேவை ஏற்படாது எனக் குறிப்பிடும் நிபுணர்கள் அதற்கான காரணத்தையும் விளக்குகின்றனர்.

ஐஸ் பாவிக்கும் போது ஒருவரில் 'டோபமைன்' (Dopamine) மிக அதிகளவில் உருவாகும் என்றும், அது அவருக்குள் 'நிஜமற்ற அதீத மகிழ்ச்சி'யை ஏற்படுத்தும் எனவும் விளக்கப்படுகின்றது.

"ஒரு மனிதன் சந்தோசமாக இருக்கும் போது அவனுள் டோபமைன் அதிகம் உருவாகும். ஒருவர் பாலியல் உறவில் இருக்கும் போது 200 மைக்ரோகிராம் டோபமைன் அவருள் இருக்கும். ஒருவருக்கு விருப்பமானவர் அவரின் அணைப்பில் இருக்கும் போது, அவருக்குள் 250 மைக்ரோகிராம் டோபமைன் உருவாகும். ஆனால் 'ஐஸ்' போதைப் பொருளை உள்ளெடுக்கும் ஒருவருக்குள் 1100 மைக்ரோகிராம் அளவில் டோபமைன் உருவாகும். இதனால் 'ஐஸ்' போதைப் பொருள் பாவிக்கின்றவர்களுக்கு, அதை விடவும் வேறு மகிழ்ச்சி தேவைப்படாது" எனவும் நிபுணர் ஒருவர் விளக்கமளித்தார்.

இத்தகைய மயக்க நிலையிலான அதீத மகிழ்ச்சி உணர்வே விட்டில் பூச்சியாக நம் இளம் சமுதாயத்தை ஐஸ் எனும் விளக்கில் வீழ்ந்து பொசுங்குவதற்குத் தூண்டி நிற்கின்றது.



# அனர்த்த முகாமைத்துவ குழுவினரின் கலந்துரையாடல் அட்டாளைச்சேனையில்

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை அனர்த்த முகாமைத்துவ குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட மீளாய்வும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விஷேட ஒன்றுகூடல் நிகழ்வும் அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனீஸ் தலைமையில் நேற்று முன்தினம்(30) இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெவ்வை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நீதிபர் எம்.எஸ்.எம்.சம்சுதீன், பிரதேச செயலாளர் பி.ரி. எம்.இர்பான், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீவேந்திர டயஸ், பிரதேச சபைச் செயலாளர் எல்.இர்பான், அட்டாளைச்சேனை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.எம்.நௌபல் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், சமூக மட்ட முக்கியஸ்தர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர், அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஜம்இயதுல் உலமா சபையின் அட்டாளைச்சேனை கிளை பிரதிநிதிகள், துறைசார் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நல அமைப்பினர் போன்றோரை இணைத்துக் கொண்டு அனர்த்தத்தை எதிர்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட இந்த விசேட அனர்த்த முகாமைத்து குழு, வெள்ள அனர்த்தத்தின் போது பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றது.

இதன்போது அனர்த்த கால வேளையில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது. அனர்த்த காலப் பகுதியில் பொதுநல செயற்பாடுகளுக்காக உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் அனர்த்தம் இடம்பெறுகின்றபோது குறைபாடுகளற்ற சேவைகளை மக்களுக்கு வழங்கும் நடைமுறைகள் தொடர்பிலும் இதன்போது விரிவகாக ஆராயப்பட்டது.



EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA




# இசுருபாய கல்வி அமைச்சில் திருட்டு; 8 ஊழியர்களிடம் வாக்கு மூலம் பதிவு!

பத்தரமுல்ல பெலவத்தை இசுருபாய கல்வி அமைச்சின் கட்டட வளாகத்தின் மேல் பொருத்தப்பட்டிருந்த 51 லட்சம் ரூபா பெறுமதியான செப்பு நாடாக்கள் திருடப்பட்டமை தொடர்பில் 8 ஊழியர்களிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் பல சாதாரண பணியாளர்களும் பல்வேறு அலுவலக அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டட வளாகம் முழுவதும் பொருத்தப்பட்டிருந்த 1731 அடி மின்னல் கடத்தி செப்பு நாடாக்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தலங்கம பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

வெளியாள்கள் யாரும் கட்டடத்தின் உச்சிக்கு செல்ல முடியாது எனவும் அங்கு பணிபுரிபவர்கள் மட்டுமே அந்த இடத்துக்குச் செல்ல முடியும் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# இருவேறு கொலைச் சம்பவங்கள்; இளைஞர்கள் பொலிஸாரால் கைது!

அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பதிவாகிய இருவேறு கொலைகள் தொடர்பில் 17 மற்றும் 18 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், ஓயாமடுவ, பண்டாரகம பிரதேசத்தில் 26 வயதுடைய இளைஞன் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் 17 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையிலான வாய்த்தர்க்கத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதால் 26 வயது இளைஞர் உயிரிழந்தார் என்று ஓயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பண்டாரகம பகுதியைச் சேர்ந்தவர், சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் என்பதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் ஓயாமடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் 45 வயதுடைய நபரொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 18 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

45 வயதுடைய நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக கெப் வண்டியில் வந்த குழுவொன்று கூரிய ஆயுதங்களால் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பயன்படுத்திய கெப் வாகனத்துடன் வவுனியாவைச் சேர்ந்த 18 வயது இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் மாணவருக்கு இலவச புள்ளி!

## பரிந்துரைத்தது அமைச்சரவை

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்குவதற்கு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளது என்று சட்டமா அதிபர் இன்று (02) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள் கசிந்த சம்பவத்தை அடுத்து இந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துவது பொருத்தமற்றது என்று அமைச்சர்கள் சபை பரிந்துரைத்துள்ளது என்றும் இதனால் மாணவர்கள் பாதிக்கப்படலாம் எனவும் சட்டமா அதிபர் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட விதத்தை சவாலுக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையின் போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் 11 ஆம் திகதி நடத்தவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.





# புதிய பிரதம நீதியரசராக மூர்து பெர்னாண்டோ!

புதிய பிரதம நீதியரசராக, உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷ ினி பெர்னாண்டோ இன்று காலை (02) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னி லையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையின் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்ணாகவும், இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இணைந் துள்ளார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வு பெற்றதை அடுத்து வெற்றிடமான பதவிக்கு அவரது பெயர் அரசியலமைப்பு சபையால் அண்மையில் அங்கீகரிக் கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997 ஆம் ஆண்டு பிரதி சொலி சிட்டர் ஜெனரலாகவும் 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனர லாகவும் பதவி உயர்வு பெற்றார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசதரப்புச் சட்டத்தரணியாக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அங்கு பணியாற்றியுள்ள முர்து பெர்னாண்டோ, 2018 மார்ச் மாதம் உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

முர்து பெர்னாண்டோ சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக கடமை யாற்றியதுடன், உச்ச நீதிமன்றத்தின் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட நீதிபதயுமாவார்.

மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல் கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத் துறை இளமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண் டார்.



# எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் மின் கட்டணம் 30 வீதத்தால் குறையும்

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி அரசு எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்துக்கும் மேலான வீதத்தில் குறைக்கும் என்று வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத் தியை மேம்படுத்த ஐந்தாண்டு திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது.



எனவே ஜனாதிபதியின் வாக்குறுதியின்படி, தேசிய மக்கள் சக்தி அரசு நிச்சயமாக அடுத்த மூன்று ஆண் டுகளில் 30 வீதத்துக்கும் அதிகமாக, மின்சார கட்டணத்தை குறைக்கும் என்று அவர் கூறியுள்ளார் நேற்று கொழும்பில் செய்தியாளர்க ளின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை களை கணிசமாகக் குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# நிவாரணம் வழங்கவில்லை; மதுபோதையில் வாள்வெட்டு!

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்!!

நிவாரணம் வழங்கவில்லை எனக் கூறி யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, வத்திராயனில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் உறவினர் மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வந்துள்ளதாவது,

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் வசிக்கும் சமூக நலன் சார் செயற்பாட்டாளர் ஒருவர் கடந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னாலான பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளார்.

இதனால் கோபமடைந்த அதே கிராமத்தை சேர்ந்த மது போதையில் சென்ற நபர் ஒருவர், தனக்கு நிவாரணம் வழங்கவில்லை எனக்கூறி, சமூக செயற்பாட்டாளர் என நினைத்து அவரது உறவினர் ஒருவரை வாளால் வெட்ட முயன்றுள்ளார்.

அதனை தடுக்க முயன்ற அவருக்கு கைகளில் வெட்டு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த உறவினர் மருதங்கேணி பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில், மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# காரைதீவு - மாவடிப்பள்ளியில் உயிரிழந்த மாணவர்களின் உறவுகளுக்கு அனுதாபம்!

## காங்கிரஸ் தலைவர் றிஷாத் எம்.பி. நேரில் தெரிவிப்பு

அம்பாறை, காரைதீவு – மாவடிப்பள்ளி பகுதியில், உழவு இயந்திரத்தில் பயணித்த போது ஏற்பட்ட விபத்தில் சிக்குண்டு, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன், நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) நேரில் சென்று அனுதாபங்களை தெரிவித்தார்.

சம்மாந்துறையைச் சேர்ந்த 06 மதரஸா மாணவர்கள், சாரதி மற்றும் அவர்களுடன் பயணித்த மேலும் ஒரு நபர் உட்பட உயிரிழந்த 08 பேரின் வீடுகளுக்கும் சென்று, குடும்ப உறுப்பினர்களை சந்தித்து, தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மக்கள் காங்கிரஸ் தவிசாளருமான அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# சென்னையில் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றும்பணியில் மாநகராட்சி தீவிரம்

சென்னை மாநகரப் பகுதியில் ஃபெங்கல் புயலால் கனமழை பெய்ததால் தேங்கிய மழைநீரை வெளியேற்றும் பணியை மாநகராட்சி நிர்வாகம் நேற்றும் தீவிரமாக மேற்கொண்டது.

வங்கக் கடலில் உருவான ஃபெங்கல் புயல் காரணமாக சென்னையில் கடந்த 3 நாள்களாக மழை பெய்தது. இதன் காரணமாக சென்னையில் 300 இற்கும் மேற்பட்ட இடங்களில் மழைநீர் தேங்கியது. அவற்றை மாநகராட்சி நிர்வாகம் 3 நாள்களாக அகற்றி வருகிறது.

வெள்ளநீரை அகற்றும் பணியில் 100 குதிரைத்திறன் கொண்ட 137 நீர் இறைக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட 1,686 நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறன. மேலும் உழவு இயந்திரங்கள் மூலம் இயக்கப்படும் 484 நீர் இறைக்கும் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகிறன. நேற்றும் பல இடங்களில் மழைநீர் தேக்கம் நீடித்தது.



குறிப்பாக வட சென்னை பட்டாளம் அங்காளம்மன் கோயில் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு வீதிகள், சோழிங்கநல்லூர் மண்டலத்துக்கு உட்பட்ட நீலாங்கரை கஜ்ரா கார்டன், ஈஞ்சம் பாக்கம் ராயல் என்கிளேவ், அனுமன் காலனி, உத்தண்டி பாரதி அவென்யூ, காரப்பாக்கம் ராஜிவ்காந்தி சாலை, மணலி மண்டலம் நேரு நகர் தெருக்கள், கோடம்பாக்கம் கோபால மேனன் சாலை – அக்பராபாத் தெரு, சேத்துப்பட்டு – தாஸ்புரம், அரும்பாக்கம் பெரியார் பாதை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று காலை முதல் வெள்ளநீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வந்தன. நேற்று பிற்பகல் நிலவரப்படி, சென்னையில் மழைநீர் தேங்கிய 341 இடங்களில், 292 இடங்களில் உள்ள மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

மீதம் உள்ள 49 இடங்களில் தொடர்ந்து மழைநீர் வெளியேற்றப்பட்டு வருவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. 22 சுரங்கப்பாதைகளில் நேற்று எங்கும் மழைநீர் தேக்கம் இல்லை. 2 நாள்களில் மழைநீர் தேக்கம் உள்ள பகுதிகளில் சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட உணவு பொதிகள் வழங்கப்பட்டன. நேற்று 200 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன. மெரினா வளைவு சாலையில் புயலால் படிந்த கடல் மணல் ஜே.சி.பி. இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டன.

# விஜய்யின் அரசியல் வருகை கண்டு பா.ஜ.க பயப்படாது: அண்ணாமலை

விஜய்யின் அரசியல் வருகை கண்டு பா.ஜ.க. பயப்படாது என்றும் உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி கொடுத்ததிலேயே தி.மு.கவின் குடும்ப ஆட்சி நிரூபணமாகி உள்ளது எனவும் லண்டனில் இருந்து திரும்பிய பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை சென்னை விமான நிலையத்தில் பேட்டி அளித்தார்.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் சர்வதேச அரசியல் படிப்பை முடித்து விட்டு, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை லண்டனில் இருந்து விமானம் மூலம் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அப்போது, பா.ஜ.கவினர் பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவித்து அவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் அண்ணாமலை கருத்து தெரிவிக்கையில்,



“திரைத்துறையில் உச்சத்தில் இருக்கும் போதே, அரசியலில் கால் பதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடிகர் விஜய் அரசியலுக்கு வந்திருக்கிறார். அவரை வரவேற்கிறோம். அதே சமயம், தனது முதல் மாநாட்டில் நிறைய விஷயங்களை அவர் பேசியிருக்கிறார். அதைப்பற்றி நேரம் வரும் போது பேசுகிறேன். மேலும், விஜய் முழு நேர அரசியலுக்கு வந்து, அவரது கருத்துக்களை முன்வைக்கும் போது, பா.ஜ.கவும் தனது கருத்துக்களை மக்கள் முன்பு வைக்கும். திராவிட கட்சிகளின் சித்தாந்தத்தை தான் விஜய்யும் பேசுகிறார். புதிதாக வேறு எதுவும் அவர் பேசவில்லை.

விஜய்யின் பேச்சு, அவரது கொள்கை, கிட்டத்தட்ட திராவிட கட்சிக ளோடு தான் ஒத்துப்போகிறது. எனவே, விஜய்யின் அரசியல் வருகை யாருக்கு பாதிப்பு என்பது மக்களுக்கு தெரியும். புதிதாக அரசியலுக்கு வருபவர்களை கண்டு பா.ஜ.க. எப்போது பயப்படாது. நடிப்பு என்பது வேறு, அரசியல் களம் என்பது வேறு. ஒக்டோபர் 28 ஆம் திகதிக்கு பிறகு நடிகர் விஜய் எத்தனை முறை வெளியே வந்திருக்கிறார்.

அவரை கேள்வி கேட்க வேண்டிய இடத்தில் நாங்கள் கேள்வி கேட்போம். அடுத்த ஓராண்டு காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதை தமிழக மக்கள் தான் தீர்மானிக்க போகிறார்கள். இன்றைய சூழலில் திராவிட கட்சிகளின் வாக்குகள் மூன்றாக பிரிந்திருக்கிறது. பா.ஜ.கவின் வாக்கு அதிகரித்து வருகிறது. உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக பொறுப்பேற்றிருக்கிறார். தி.மு.க. எப்போதும் ஒரு குடும்பத்தை சார்ந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டை தான் பா.ஜ.க தொடர்ந்து வைத்து வருகிறது. இன்று அது நிரூபனமாகி உள்ளது.”– என்றார்.

# டொலருக்கு எதிராக செயல்பட்டால் பிரிக்ஸ் நாடுகளுக்கு 100 சதவீத வரி

## ட்ரம்ப் எச்சரிக்கை



சர்வதேச வர்த்தகத்தில் டொலருக்கு மாற்றாக புதிய பொதுவான நாணயத்தை கொண்டு வர திட்டமிட்டால் பிரிக்ஸ் நாடுகளின் மீது 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று புதிய அமெரிக்க ஜனாதிபதி தேர்வாகியுள்ள டொனால்டு ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது சொந்த சமூக வலைதளமான ட்ரூத் சோஷியலில் சனிக்கிழமை வெளியிட்டுள்ள பதிவில்,

“பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா இவற்றுடன் சேர்த்து புதிய உறுப்பினர்களான ஈரான், எகிப்து, எத்தியோப்பியா, மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவையும் பிரிக்ஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளின் கூட்டணி அமெரிக்க டொலருக்கு மாற்றாக புதிய பிரிக்ஸ் நாணயத்தை உருவாக்கவோ அல்லது ஏதாவது ஒரு நாணயத்தை மாற்றாக கொண்டு வர மாட்டோம் என்கிற உறுதிமொழியை அவர்கள் அமெரிக்காவுக்கு அளிக்க வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் பிரிக்ஸ் கூட்டணி மற்றும் அதற்கு ஆதரவளிக்கும் நாடுகள் 100 சதவீத வரிவிதிப்பை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

டொலருக்கு மாற்றான நாணயத்தை கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டால் பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க பொருளாதாரத்தை அணுகும் வாய்ப்பை




இழக்க நேரிடும். அவர்கள் அனைவரும் தங்களது பொருள்கள் அல்லது தயாரிப்புகளை அற்புதமான அமெரிக்க பொருளாதாரத்தில் விற்பனை செய்வதற்கு ‘குட்பை’ சொல்ல நேரிடும்.

சர்வதேச வர்த்தகத்தில் டொலருக்கு மாற்றாக வேறு ஒரு நாணயத்தை உருவாக்கும் பிரிக்ஸ் நாடுகளின் நோக்கம் ஒருபோதும் வெற்றி பெறாது. அப்படி செய்யும் நாடுகளுக்கு அமெரிக்க பொருளாதாரத்தில் நிச்சயம் இடமில்லை.” – என்று பதிவிட்டுள்ளார்.

ரஷ்யாவின் கசான் நகரில் பிரிக்ஸ் கூட்டணி நாடுகளின் உச்சி மாநாடு சமீபத்தில் நடைபெற்றது. இந்த உச்சி மாநாட்டில், டொலர் அல்லாத பரிவர்த்தனையை ஊக்குவிக்கவும், உள்ளூர் நாணயங்களை வலுப்படுத்தவும் பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் முக்கிய ஆலோசனையை மேற்கொண்டன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் கூறுகையில், “ டொலரை ஆயுதமாக்கி நம்மை செயல்படவிடாமல் அமெரிக்கா தடுக்கிறது. இதனால், மாற்று வழிமுறையை தேட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம்.” – என்றார்.

டொலருக்கு மாற்றான நாணயத்தை உருவாக்கப்படும் நிலையில் அது, அமெரிக்க விதிக்கும் தடைகள் மற்றும் அது அறிவிக்கும் பணவியல் கொள்கையால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்து உள்ளூர் பொருளாதாரம் பாதுகாக்கப்படும் என்பது பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் எண்ணமாக உள்ளது. இந்த நிலையில், ட்ரம்ப் 100 சதவீத வரிவிதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என மிரட்டியுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

உலக நாடுகளின் அந்நியச் செலாவணி கையிருப்பில் டொலரின் பங்களிப்பு 58 சதவீதமாக உள்ளது. எனவே, குறுகிய மற்றும் நடுத்தர கால பயன்பாட்டில் டொலரின் பங்கு தவிர்க்க முடியாதது என அட்லாண்டிக் கவுன்சில் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

டொலர் ஆதிக்கத்துக்கு முடிவு கட்ட பிரிக்ஸ் கூட்டணி மற்றும் வளரும் நாடுகள் அழைப்பு விடுத்துள்ள போதிலும், இன்னும் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் போன்ற முக்கிய பொருள்களின் வர்த்தகம் அமெரிக்க டொலரில் தான் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





# ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கு ஜெலன்ஸ்கி முன்வைக்கும் நிபந்தனை

ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நிபந்தனை ஒன்றை முன்வைத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, ரஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்படாத உக்ரைன் பகுதிகளை நேட்டோவின் கீழ் கொண்டு வந்தால் ரஷ்யாவுடனான போரை நிறுத்த முடியும் என்று நிபந்தனை ஒன்றை அவர் முன்வைத்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் ஆயிரம் நாள்களைக் கடந்து நீடித்து செல்கின்றது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்கா உதவி செய்து வருகிறது.

இந்நிலையில், சமீபத்தில் முதல் முறையாக அமெரிக்க ஏவுகணையை பயன்படுத்தி ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியது.

இதனால் ஆத்திரம் அடைந்து உள்ள ரஷ்யா, முதல் முறையாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ.சி.பி.எம் ஏவுகணையை பயன்படுத்தி உக்ரைன் மீது தாக்குதல் நடத்தியது.

இதேவேளை, உக்ரைனுக்கு உதவும் நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி புதின் எச்சரிக்கை விடுத்ததுடன் உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ஹைப்பர் சோனிக் ஏவு கணைகளை அதிகளவில் தயாரிக்க உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
திங்கட்கிழமை 02/12/2024

**வீடு புனரமைப்பின்போது ஏமாற்றப்பட்ட குடும்பம்**

ஒன்றாரியோ மாகாணத்தில் வீடு புனரமைப்பதாக கூறி குடும்பம் ஒன்று ஏமாற்றப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் விட்பெய் பகுதியில் 02▶



# ஒன்றாரியோ மாகாணத்தின் பல பகுதிகளில் கடும் பனிப்பொழிவு குறித்து எதிர்வுகூறல்

**கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் பல பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.**

**மாகாணத்தின் குளங்கள் மிகவும் குறைந்த அளவு வெப்பநிலைக்கு செல்லும் என தெரிவிக்கப்படுகிறது.**

**சுற்றுச்சூழல் மற்றும் நீரின் வெப்பநிலை காரணமாக குளங்கள் பனி படலத்தினால் மூடப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

எதிர்வரும் சில தினங்களுக்கு மாகாணத்தில் இவ்வாறு கடுமையான பனிப்பொழிவு நிலையை அவதானிக்க முடியும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சுமார் 80 சென்ரி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்கூறப் பட்டுள்ளது.

இடி மின்னல் தாக்கத்துடன் மணிக்கு 8 சென்ரி மீற்றர் பனிப்பொழி வினை எதிர்பார்க்க முடியும் என தெரி விக்கப்பட்டுள்ளது.

எனினும், ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் அதிக அளவு பனிப்பொழிவு இருக்காது என எதிர்வுகூறப்பட்டுள் ளது.

# இரவில் வானத்தில் தோன்றும் பிரம்மாண்ட ஒளி தூண்கள்






கனடாவில் உள்ள அல்பெர்ட்டா நகரில் இரவு வேளைகளில் வானத்தில் 'ஒளி தூண்கள்' என அழைக்கப்படும் வெளிச்சம் தோன்றுகிறது.

காண்போரை பிரமிக்க வைக்கும் இந்த வெளிச்ச தூண்களின் புகைப் படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன.

இதை பார்த்த பலரும், இது வேற்று கிரக வாசிகளின் செயல் என கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

ஆனால் கனடாவில் இது போன்ற 'ஒளி தூண்கள்' பெரும்பாலும் குளிர் காலங்களில் அதிகமாக காணப்படு கின்றன. இது இயற்கையாக உருவா கும் ஒரு ஒளியியல் மாயை (Optical Illusion) என்று அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.






# வெள்ளரிக்காய் குறித்த கனடாவில் எச்சரிக்கை

கனடாவில் விற்பனை செய்யப்படும் வெள்ளரிக்காய் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிறுவனம் ஒன்று விற்பனை செய்த வெள்ளரிக்காய் வகைகளை சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

குறிப்பாக இந்த வெள்ளரிக்காய் வகைகளில் சல்மோன்லா பக்றீரியா தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த வெள்ளரிக்காய் வகைகளை சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மற்றும் ஏனைய கனடிய மாகாணங்களிலும் இந்த வெள்ளரிக்காய் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் சன்பிட் என்ற நிறுவனத்தினால் இந்த வெள்ளரிக் காய் வகைகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் கரட்களில் பக்டீரியா தொற்று தாக்கம்

கனடாவில் கரட் கொள்வனவு தொடர்பில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே சில வகை கரட்களில் எனப்படும் தொற்று காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

குறிப்பாக சேதன பசளை கொண்டு உற்பத்தி செய்யப்படும் சில வகை கறக்களில் இந்த ஈகோலி தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது இந்த வகை கரட்களில் மேலும் சில உற்பத்திகளும் உள்ளடக்கி புதிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



இந்த இயற்கை முறையில் விளைவிக்கப்படும் கரட் வகைகளில் தொற்று காணப்படுவதாகவும் இது ஆபத்தானது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வரையில் விற்பனை செய்யப்பட்ட கரட் வகைகளிலும், கடந்த செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்ட கரட் வகைகளிலும் இந்த அச்சுறுத்தல் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த கரட் வகைகளை கொள்வனவு செய்வோம் அவதானத்துடன் கொள்வனவு செய்யுமாறு அனேகமான கரட் உற்பத்திகள் சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பக்டீரியா தொற்று தாக்கம் அடைந்த கரட் வகைகள் பார்த்தால் கண்டுபிடிக்க முடியாத வகையில் காணப்படும் எனவும் அவற்றை உட்கொள்வதன் மூலம் பாரதூரமான நோய்வாய் நிலைமைகள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பம் ஒன்று வீடு புனரமைத்தல் தொடர்பான நடவடிக்கையில் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17 மாதங்களாக இந்த வீடு புனரமைக்கப்பட்டு வருவதாக குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.



இந்த வீடு புனரமைத்தல் நடவடிக்கை நீண்ட காலம் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த குடும்பத்தினர் தங்களது சமையலறையை விஸ்தரிப்பு செய்வதற்கு முயற்சித்துள்ளனர்.

இதற்காக 255,000 டொலர்கள் செலவாகும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் இதுவரையில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் டாலர் வழங்கப்பட்ட போதிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வகையில் புனரமைப்புச் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.